


கோயம்புத்தூர் ரெசிடென்சி ஹோட்டலில் நடைபெற்ற உலக பொது தொழில் மாநாட்டு முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாநாட்டு தொடர்பான தகவல்களை ஒரே தளத்தில் அறிந்து கொள்ள உதவும் செயலினை வெளியிட்டார். உடன் அரசு அதிகாரிகள் உள்ளனர்.



மங்களூர் கிழக்கு ஒன்றியம், ஈ.கீரனூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடம் ஸ்டாலின் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் முகாமை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயனாளிகளுக்கு ஆவணங்களை வழங்கினார்!

சென்னை, செப். 26-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் மண்டலம் 6 வார்டு-58 சென்னை, பெரியமேடு நெவல் மருத்துவமனை சாலை உள்ள சமுதாயக் கூடத்தில் நேற்று (25/9/2025) வியாழக்கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக





மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம். 11 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 128 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 65 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 27 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 10 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை 13 மற்றும் பெயர் மாற்றுதல் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - -149 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 1 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -3 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -264 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -0

என மொத்தமாக 1171 மனுக்கள் பெறப்பட்டு அதில் 919 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை

உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், பகுதி கழகச் செயலாளர் வி சுதாகர் மண்டல குழு தலைவர் பி. ஸ்ரீராமுலு, கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா,மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் மண்டல அலுவலர் விஜய்பாபு வட்ட கழகச் செயலாளர் வி விஜயகுமார், ஆர்.பாபு மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டி:

# வெற்றி பெற்ற 2,135 பேருக்கு பரிசுத்தொகை - பதக்கங்கள்!

## அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர் செப் 26;-

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட அலுவலகத்திலுள்ள விளையாட்டு மைதனாத்தில் இன்று (23.092025) முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் 2025 - வெற்றி பெற்ற 2,135 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பரிசு தொகையாக மொத்தம் ரூ.43,05,000 வங்கியின் வரவு வைத்து, பாராட்டு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கினார்.

இதனை தொடர்ந்து அமைச்சர் பேசுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைகிணங்க 2025 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளின் துவக்க விழாவினை கடந்த 26.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. 26.08.2025 அன்று நடைபெற்ற தடகளம், இறகு பந்து மற்றும் சதுரங்கம் போட்டிகளில் 7000 வீரர் வீராங்கனைகள் கலந்துக் கொண்டார்கள்

திருவள்ளூர் மாவட்டத்தின் சார்பாக இப்போட்டிகளுக்கு இணைய தளம் வாயிலாக மொத்த பதிவு செய்த விளையாட்டு வீரர் வீராங்கனைகளின் எண்ணிக்கை. 1,04,556 ஆகும். மேலும் 5 பிரிவுகளில் பள்ளிப் பிரிவு சார்பாக 28,971 என்ற எண்ணிக்கையிலும், கல்லூரி பிரிவு சார்பாக 13,469 என்ற எண்ணிக்கையிலும், பொதுப் பிரிவு சார்பாக 3,505 என்ற எண்ணிக்கையிலும், அரசு பிரிவு சார்பாக 1,503 என்ற எண்ணிக்கையிலும் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பிரிவு சார்பாக 412 என்ற எண்ணிக்கையிலும் ஆக மொத்தம் 47,860 விளையாட்டு வீரர் வீராங்கனைகள் கலந்துக் கொண்டார்கள்.

மேலும், நடைப் பெற்று முடிந்த மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பையில் 57 வகையான விளையாட்டு போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற 2,135 விளையாட்டு வீரர் வீராங்கனைகள் பரிசு தொகையாக மொத்தம் ரூ.43,05,000 /-

(ரூபாய் நாற்பத்தி மூன்று இலட்சத்து ஐந்தாயிரம்) வங்கியில் வரவு வைக்கப்பட்டது.

மேலும் இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றிப்பெற்ற 2,135 வீரர்/ வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் வெற்றிப் பெற்று மாநில அளவிலான போட்டிகளுக்கு மொத்தம் 660 வீரர் வீராங்கனைகள் வருகின்ற 02.10.2025 அன்று முதல் 14.10.2025 வரை பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் போட்டிகளில் கலந்துக்கொள்ள உள்ளார்கள். இதில் தனி நபர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெரும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு பரிசு தொகையாக ரூ.1,00,000/-, 75,000/- மற்றும் 50,000/- வழங்கப்பட இருக்கின்றன. குழுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெரும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு பரிசு தொகையாக ரூ.75,000/-, 50,000/- மற்றும் 25,000/- வழங்கப்படவுள்ளது என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தமு.பிரதாப், சட்டமன்ற உறப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் டி.ஜெ.கோவிந்தராஜ், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் திருமதி.பா.உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ம.மோகனா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் வி.சேதுராஜன், திரளான விளையாட்டு வீரர் வீரங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

## விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் - தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், செப். 26-

விழுப்புரம் (தெற்கு) மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடுதுணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் மற்றும் தேர்தல் மண்டல பொறுப்பாளர், கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர், மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் MRK.பன்னீர்செல்வம் அவர்களின் வழிகாட்டுதலின்படி விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க சார்பில் ( BLA 2 வாக்குச்சாவடி முகவர்கள் ) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்

28.09.2025 (ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணிக்கு திருக்கோவிலூர் தேவிமுருகன் திருமண மண்டபத்தில் திருக்கோவி லூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட (வாக்குச்சாவடி முகவர்கள் BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது.

28.09.2025 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட (வாக்குச்சாவடி முகவர்கள் BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைகூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.கார்த்தி கேயன், சிவ.ஜெயராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, மாவட்ட துணை செயலாளர்கள் டி.என். முருகன் , இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள் , தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பா ளர்கள்அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தெரிவித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள திருநங்கைகள் இலவச வீட்டுமனை பட்டா வேண்டுமென்ற என நீண்ட நாள் கோரிக்கையை எற்று கவரைப்பேட்டை லட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் 90 திருநங்கைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் கி.வே.ஆனந்தகுமார், கா.சு.ஜெகதீசன், நா.செல்வசேகரன், எம்.அருள், ஜோதி, ஹரிபாபு, பா.முத்துசாமி, ஜி.சுமன், இ.எம்.ராஜேஷ், அங்கமுத்து, மணிகண்டன், தியாகு, மனோஜ், சதிஷ், ராஜா லோகநாதன், ராஜேஷ், ராஜேந்திரன், விநாயகம், இ.கோதண்டன், ப.ஆனந்தராஜு, எஸ்.கோபால், ஒய்.கஜேந்திரன், பாலா, சிவஇளங்கோ, எம்.முரளி, லால், வட்டார வளர்ச்சி அலுவலர் அமிழ்தமன்னன், துணை வட்டாச்சியர் கந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மண்டல பொறுப்பாளர்–அமைச்சர் தங்கம் தென்னரசு - தொகுதி மேற்பார்வையாளர் திருச்சி சிவா எம்.பி. பங்கேற்பு!

# மேலூர் சட்டமன்றத் தொகுதி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்–அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, செப்.26-

வருகிற 27ஆம் தேதி மேலூரில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான திமுக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடை பெறு வதாகவும் இதில் மண்டல பொறுப்பாளர், அமைச்சர் தங்கம் தென்னரசு, மேலூர் தொகுதி மேற்பார்வையாளர் திருச்சி என்.சிவா எம்.பி., உள்ளிட்டோர் பங்கேற்று ஆலோசனைகள் வழங்க உள்ளதாக வடக்கு மாவட்ட செயலாளர், வணிக வரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார் அதன் விபரம்



திருச்சி சிவா எம் பி, தொகுதி பொறுப்பாளர் வ.து.ந.

எல்லோர்க்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற நோக்குடன் பல்வேறு வியூகங்களை வகுத்து தேர்தல் பணிகளை முடுக்கி விட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக ஏற்கனவே மாவட்டம் தோறும் மண்டல பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களை தொகுதி மேற்பார்வையாளரக நியமித்துள்ளார்

அதன்படி மேலூர் சட்டமன்ற தொகுதிக்கு திருச்சி என்.சிவா எம் பி நியமிக்கப்பட்டுள்ளார்

அதனை முன்னிட்டு நாளை (27.09.2025-சனிக்கிழமை)காலை 10 மணிக்கு மேலூரில் அழகர்கோவில் சாலையில் அமைந்துள்ள லதா திருமண மண்டபத்தில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக கொள்கை பரப்புச் செயலாளர் ஆனந்த் உள்ளிட்டோர் பங்கேற்று தேர்தல் நடவடிக்கை தொடர்பாக ஆய்வு நடத்தி பல்வேறு ஆலோசனைகள் வழங்க உள்ளனர்

இக்கூட்டத்தில் மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பிஎல் ஏ டு, பி எல் சி உள்ளிட்ட வாக்குச்சாவடி பாகமுகவர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்ட செயலாளர், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–1 மாமன்ற கூட்டம் மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.



மயிலை மேற்கு பகுதி செயலாலர் நந்தனம் கி.மதி முன்னிலையில் பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர். ராஜேந்திரன் தலைமையில் நேற்று (25/09/2025) வட்ட கழக செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவீரர் ஜெ.அன்பழகன் பெயரில் மேம்பாலம் திறக்கவிருக்கும் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க மயிலை மேற்கு பகுதி சார்பாக வட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றுப்பட்டது.